MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED ON 19.05.2011 AT 10.30 A.M. AT DDC HALL, DISTRICT COLLECTORATE, TIRUNELVELI FOR THE EXISTING LIMESTONE MINES OF M/S.SOUTH INDIA MINES AND MINERALS INDUSTRIES LIMITED, (NELLAITHIRUTHU LIMESTONE MINES), PALLIKOTTAI VILLAGE, TIRUNELVELI TALUK, TIRUNELVELI DISTRICT

PRESENT

THIRU. M. JAYARAMAN, I.A.S.,
DISTRICT COLLECTOR
TIRUNELVELI

THIRU. R. VIJAYA BASKARAN, M.E., MBA
DISTRICT ENVIRONMENTAL ENGINEER
TNPC BOARD, TIRUNELVELI

THIRU. C.MOHANASUNDARAM., MSc
DEPUTY DIRECTOR (GEOLOGY & MINING)
TIRUNELVELI

THIRU. A.RAJARAJAN.,
GENERAL MANAGER
DISTRICT INDUSTRIES CENTRE
TIRUNELVELI

PARTICIPANTS : LIST ENCLOSED

At the outset the District Environmental Engineer welcomed the gathering and informed the objective of public hearing. The District Collector initiated the proceedings and asked the authorities of M/s. South India Mines and Minerals Industries Limited to make a presentation. Thiru.G.Vageesan, Mines Manager of M/s. South India Mines and Minerals Industries Limited informed the following.

1. The unit was in operation from 01/04/1970.
2. The unit employes 6 persons on direct employment and 17 under indirect employment.
3. The unit excavates 55T/day of lime stones
4. The unit uses 3500 litres of water per day
5. The unit is removing overburden of 400 MT using only one excavator and 5 tippers.
6. The unit uses 6 kg of explosives/day and it is adopting MSD detonator to reduce vibration.
7. Water from the mines is given to Thiru.Kalingariyan, Vallimuthu, Ramakrishnan, Arumugathammal and Gursusamy

The unit concluded that the unit is ready to help the schools nearby.

The District Collector informed that opportunity will be given to all the public to offer their views and asked the public to offer their views. Their objections and views were all well heard and recorded as minutes of the public hearing. Some of the public verbally made their comments and some have submitted their objections in writing to the District Collector. The verbal statements and written petitions and reply furnished by the industry are detailed below.

Thiru S.P Muthuraman, Ex Youth Congress President, Tirunelveli asked the following:

1. Is the unit is operating with Pollution Control Board Clearance
2. Is the unit is operating now
3. Action shall be taken under Environmental Protection Act for violation of operation without Environmental Clearance.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board replied that the unit is operating without consent and action will be taken against the unit.
Thiru. S.P. Muthuraman concluded that M/s. Krishna Mines and M/s. South India Mines and Minerals Limited shall be closed as they are operating without Pollution Control Board's clearance in violation of Environmental Protection Act 1986. In this regard he gave a written petition which is enclosed as annexure I. Thiru.S.P. Muthuraman also gave another written petition which reads the following objections. It is enclosed vide Annexure II

1. Water Pollution is caused
2. Air Pollution is caused
3. Noise Pollution is caused
4. Buildings vibrate due to blasting
5. No Social welfare done
6. No Economic welfare activities done for example employment
7. Punja lands are affected
8. "Ozone " Oxygen Region changes because of mining.
9. Grazing of cattle is affected.
10. A great wall of China is created with over burden
11. The unit mines 1000 Tonnes of limestone against 400 tonnes eligible
12. Ground water depletion is possible
13. Mines water is not given to agriculture
14. Earthquake may occur
15. Five Year Plan of IBM not incorporated
16. Unit is operating without TNPC Board consent, it should be closed.
17. For the benefits of an individual public shall not be affected and hence the mines should be closed.

Thiru. M. Sudalai Kannan Ex. Member of Corporation, Tirunelveli Urban District Congress Committee SC/ST Department

1. More than 20 villages are located nearby. These villages depend on agriculture their basic ground water need will be affected.
2. Pump sets provided by them will not draw water beyond 40 feet from ground level as the mines have gone deep, water table also had gone down. Hence pumps cannot draw water and their agriculture is affected.
3. The area will become a desert due to mining operations
4. Pallikottai and nearby villagers will be affected
5. Operation of the mines without environmental clearance is an offence.
6. The Government is planning to give cattles to public for their lively hood. But people are not able to rear cattles in this area due to the operation of the mining.
7. Villagers of Nanjankulam, Thenkalam, Pudhur, Nallam malpuram, Pallikottai, Alavanthankulam will loose their Ground water and have to vacate their place.

   He concluded that the mines should be closed. He gave a written petition also on the above lines which is enclosed vide annexure 3.

Thiru. T.Rajamanickam, All India Central Council of Trade Union

He informed the following through a petition which is enclosed vide Annexure 4

1. The authorities did not follow the rule as well as law while granting extension of lease. There are various illegalities and irregularities in the mining operation. The authorities knowing the same very well and obtaining illegal gratification and permitted, for the mining operation which would heavily affect the common people

2. The residential area is much closer for the mining areas. Originally the residential areas should be 300 metres away from the mining area but the dwelling houses are there nearly 50 meters from mining area which is against the rule and which will affect the residents . The authorities mechanically granting and extending the mining license without visiting the premises.

3. The mining operations are also done without following the norms unauthorisedly doing mining operations much higher than the grant unofficially. It is also happened with the help of officers attached to your own office. The quantum fixed by the authorities in mining operations are not strictly followed. The lease holders with the hel;p of modern machineries such as JCB and other heavey utility vehicle remove mines more than the fixed quantum per day without the knowledge of the Govt. but with the help of some official.

4. The conditions relating to maintain the vegetation such as planting trees to maintain eco logical balance has been violated due to the violation of norms in removing mines the ground water level decreases and it affects the local people

5. The present usage of detonator for removing ceramic stories are also powerful and the quantity of usage of detonator is higher than the prescribed norms which would naturally affect the local residents.

6. The revenue authorities as well as the local administration authorities helps a lot illegally for the mining authorities. Even giving permission for mining operations the local authorities provides planning approval in the limits of quarrying operations. It fails to protect the residents and tries to give new plan approval and failed to control the mining operations for their illegal mining. The blast of present detonator which is used by the mining operators would heavily affect the common public and local residents. The mining operators even during day light used to blast detonator with huge sound the nearby dwelling building are found to be shake.

7. The ground water level and the pollution created to the drinking water affects heavily for the local people.

8. The employment for local people is completely neglected. All persons employed on the mining operations are mostly children and the authorities failed to visit the premises atleast once in a month. All the working people are From Rajasthan, Andrra Pradesh and Bihar and there is serious violations of labour laws and the employees are exploited and it amounts unfair labour practice

9. The dust allergy and the formation of dust like snow heavily affect lungs and respiration system of the public

10. The authorities failed to note that there is a heavy loss to the Govt. in fixing the royalty. The interested authorities in the past obtained heavy illegally bribe and permitted to remove mines higher than the prescribed amount by fixing lesser royalty. At present if it is calculated it be might by several crores loss to the government in the past operation. Now also the authorities fixed lowest royalty price which would affect the monetary benefit of the government

11. The rain water also thrown into the mined areas and it became waste one which would be utilized for agricultural purpose.

12. There is no list of workers strength maintained by the mining operators. There is no welfare facilities implemented in the working premises by the mining authorities. There is no insurance coverage, PF benefits, Bonus benefits and even minimum wages has been neglected to the employees. Hence the mining operators engaged workers from outside state such as Bihar, and Rajasthan. It might be revealed if the authorities make a surprise check with the help of police.

13. It is necessary to form a committee by choosing a member from the common public to monitor the day to day activity of mining operations since serious violations in all branches from the granting of lease till be removal of mines. Hence it is just to form a monitoring committee to observe the operation and to file a report to the Govt. atleast monthly once

He also verbally added that the mines should be closed and the employees shall be granted compensation. The Mining lease shall be cancelled and profit earned by the unit shall be recovered and granted to the employees for their welfare.

The District Collector, enquired whether Labour from other states are employed and child labour is employed.

The unit replied that no child labour or employees from other states are employed.

The collector informed that the neighbouring villagers can visit the mines and see whether any child labour is employed and report to concerned authorities for taking action.

Similarly if there is any dispute on employment of labour it shall be reported to the labour department.

The District Collector also informed that Inspector of Factories and A.D (Mines) shall inspect the mines and report to the Collector.

The Collector also strongly directed the TNPC Board to see that the mines shall not operate without consent of the Board. The collector also instructed that the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board shall report the facts to the Member Secretary and Chairman of Tamil Nadu Pollution Control Board to take action on the mines operating without consent.

Thiru Kalangarayan informed that heavy blasting shall not be carried out in the mines and only jack hammer drilling can be done. Many villagers also at the end of the meeting informed the same and requested not to allow the mines to use any explosive and instruct the unit to use only jack hammer for drilling to remove lime stones.

The District Collector while summing up the meeting instructed the mines not to operate without getting the consent of the Board and instructed the District Environmental Engineer,Tamil Nadu Pollution Control Board again to take necessary actions against the unit for operating without consent and the meeting came to an end.

District Environmental Engineer,
Tamil Nadu Pollution Control Board,
Tirunelveli.

District Collector,
Tirunelveli

**<u>தி சவுத் இந்தியா மைன்ஸ்சின் சுண்ணாம்புக்கல் சுரங்கம் குத்தகை நீட்டிப்பு பொது மக்கள் கருத்து கேட்புணர்வு கூட்டம் 19.05.2011 நாள் முற்பகல் 10.30 மணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவரின் வளர்ச்சி மன்ற கூட்டத்தொடரில் கலந்துகொண்டவர்கள் விபரம்</u>**

| வரிசை எண். | பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1 | திரு மு. ஜெயராமன்,<br>மாவட்ட ஆட்சித்தலைவர்,<br>திருநெல்வேலி |
| 2. | திரு இர. விஜயபாஸ்கரன்,<br>மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர். |
| 3. | திரு சி. மோகன சுந்தரம்,<br>துணை இயக்குநர்<br>கணிமம் மற்றும் சுரங்கம். திருநெல்வேலி. |
| 4. | எ. ராஜராஜன்.<br>பொது மேலாளர்<br>மாவட்ட தொழில் மையம், திருநெல்வேலி |
| 5. | எ. கிருஷ்ண மூர்த்தி,<br>சிறப்பு அதிகாரி,<br>சவுத் இந்தியா மைன்ஸ் |
| 6. | சி. சுந்தராமன்,<br>நில அதிகாரி<br>சவுத் இந்தியா மைன்ஸ் |
| 7. | டி. பால்சாமி<br>4/223. காமராஜ் நகர்,<br>தென்கலம் அஞ்சல். |
| 8. | பி. கண்ணன்.<br>தென்கலம். |
| 9. | எஸ். சுடலைகண்ணு<br>தலைவர்<br>மாவட்ட காங்கிரஸ். எஸ்சி/எஸ்டி பிரிவு<br>1/50 சரோஜினி தெரு, திருநெல்வேலி-627 008. |
| 10. | ஆ. முருகன்<br>பழையபேட்டை-627 008. |
| 11. | ஜி. முரளி,<br>திருநெல்வேலி. |
| 12. | எஸ். பொன்மணி,<br>கொக்கிரகுளம். |
| 13. | எம். தனசிங்<br>கொக்கிரகுளம். |
| 14. | மா. கணபதி,<br>தென்கலம். |
| 15. | எச். பத்மநாதன்,<br>சங்கர் நகர். |
| 16. | பி.எம். கிருஷ்ணமூர்த்தி,<br>சங்கர் நகர். |
| 17. | ஜி. வக்கீஸ்<br>நெல்லை திருத்து மைன்ஸ்<br>சங்கர் நகர். |
| 18. | எஸ். ராஜ்மோகன்<br>என்விரோ கேர், மதுரை. |
| 19. | எஸ்.பி. முத்துராமன்,<br>முன்னாள் இளைஞ்சர் காங்கிரஸ். |
| 20 | இ. கலன்கரயன்,<br>நெல்லை திருத்து. |
| 21 | அ. முத்தையா,<br>பள்ளிக்கோட்டை. |
| 22. | வி. கோபால்,<br>பள்ளிக்கோட்டை |
| 23. | வி. செல்லத்துரை<br>பள்ளிக்கோட்டை. |

| | |
|---|---|
| 24. | கே. பழனிச்சாமி,<br>நெல்லை திருத்து |
| 25. | பி. நாராயணன்,<br>நெல்லை திருத்து |
| 26. | கே. கோபால்<br>நெல்லை திருத்து |
| 27. | சு. சுப்பிரமணியன்<br>நெல்லை திருத்து. |
| 28. | பி. குருசாமி<br>நெல்லை திருத்து |
| 29. | சி. கோபால்<br>நெல்லை திருத்து |
| 30. | எஸ். தருமன்<br>நெல்லை திருத்து |
| 31. | எம். சந்திரசேகர்<br>நெல்லை திருத்து |
| 32. | கே. முருகன்.<br>நெல்லை திருத்து |
| 33. | எஸ். ஜயப்பன்.<br>நெல்லை திருத்து |
| 34. | கே. கணேசன்<br>சி.பி.ஐ. எம்.எல், திருநெல்வேலி டவுண் |
| 35. | டி. இராஜமாணிக்கம்<br>சி.பி.ஐ. எம்.எல், பேட்டை. |
| 36. | வி. கருப்பசாமி.<br>சி.பி.ஐ. எம்.எல், திருநெல்வேலி டவுண் |
| 37. | மாடசாமி.<br>சி.பி.ஐ. எம்.எல், பேட்டை. |
| 38. | எஸ். முத்துகோமலசாமி,<br>BDO. மானூர். |

**திருவாளர்கள் சவுத் இந்தியா மைன்ஸ் அன்ட் மினரல்ஸ் லிட், பள்ளிக்கோட்டை கிராமம். திருநெல்வேலி வட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில், உள்ள சுரங்கம் தொடர்பாக 19.05.2011 முற்பகல் 10.30 மணிக்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் நடவடிக்கை**

**முன்னிலை:-**

முனைவர் மு. ஜெயராமன். இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி மாவட்டம்

திரு இர. விஜயபாஸ்கரன், எம்.இ. எம்.பி.ஏ
மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி

திரு சி. மோகனசுந்தரம். எம். எஸ்ஸி
துணை இயக்குநர்
சுரங்கம் மற்றும் கனிமவளத்துறை
திருநெல்வேலி

திரு எ. ராஜராஜன்
பொது மேலாளர்,
மாவட்ட தொழில் மையம், திருநெல்வேலி

கலந்துகொண்டோர் : பட்டியல்படி

மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் அனைவரையும் வரவேற்று பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் நோக்கத்தினையும், கூட்ட வழிமுறையையும் விவரித்தார். தொடர்ந்து

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், சவுத் இந்தியா மைன்ஸ் அன்ட் மினரல்ஸ் லிட் நிறுவனத்தினரை திட்டம் தொடர்பான விளக்கம் தருமாறு கூறினார். சவுத் இந்தியா மைன்ஸ் அன்ட் மினரல்ஸ் லிட் நிறுவனத்தின் சுரங்க மேலாளர் திரு ஜி. வாசன், திட்டத்தினைப் பற்றிய விபரங்களை கீழ்கண்டவாறு விளக்கினார்.

-1-

1. இச்சுரங்கமானது 01.04.1970 முதல் செயல்பட்டு வருகிறது.
2. இச்சுரங்கத்தினால் 6 நபர்களுக்கு நேரடியாகவும் 17 பேர் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.
3. இந்த நிறுவனம் நாளுக்கு சுமார் 55டன் சுண்ணாம்புக்கல் தோண்டுகிறது.
4. சுரங்க நிறுவனத்தில் தினமும் சுமார் 3500 லிட்டர் தண்ணீர் பயன்படுத்தப்படுகிறது.
5. சுரங்கத்தின் மேல் மண்ணை அகற்ற ஒரு எக்ஸ்கவேட்டர் மற்றும் 5 டிப்பர் லாரிகள் நிறுவனத்தால் பயன்படுத்தப்படுகிறது.
6. இந்நிறுவனத்தில் தினமும் 6 கிலோ வெடிமருந்துகள் பயன்படுத்தப்படுகிறது. மேலும் இந்நிறுவனத்தில் அதிர்வைக் குறைக்கும் பொருட்டு MSD வெடி மருந்து முறை மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. சுரங்கத்திலுள்ள நீர் திரு காளங்கராயன், வள்ளிமுத்து, ராமகிருஷ்ணன், ஆறுமுகத்தம்மாள் மற்றும் குருசாமி ஆகியவிவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் பேசும்போது திட்டத்தினை பற்றி கருத்து கூற அனைத்து பொதுமக்களுக்கும் வாய்ப்பு வழங்கப்படும் என கூறினார். பொதுமக்களின் எதிர்ப்புகள் மற்றும் கருத்துக்கள் கவனமாக கேட்கப்பட்டு நடவடிக்கை பதிவு செய்யப்பட்டது. பொதுமக்களில் சிலர் வாய்மொழியாக கருத்துக்களை தெரிவித்தனர். ஒரு சிலர் தங்கள் எதிர்ப்புகளை எழுத்து பூர்வமாக மாவட்ட ஆட்சியரிடம் தெரிவித்தனர்.

கூட்டத்தில் நான்கு பேர் எழுத்து மூலமாகவும் வாய்மொழியாகவும் தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு.

**எஸ்.பி. முத்துராமன், முன்னாள் இளைஞர் காங்கிரஸ் தலைவர்** பின்வரும் கேள்விகளை கேட்டார்

1. இந்நிறுவனமானது மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அனுமதியுடன் இயக்கப்படுகிறதா?
2. தற்போது நிறுவனம் இயங்கி வருகிறதா ?
3. சுற்றுச் சூழல் அனுமதி இல்லாமல் இயக்குவதற்கு, சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

-2-

மாவட்ட சுற்றுப்புற சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், இது தொடர்பாக கருத்து கூறும்போது தொழிற்சாலையானது மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணை பெறாமல் இயங்கி வருவதாகவும் இதற்காக நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். தொடர்ந்து திரு எஸ்.பி. முத்துராமன் கிருஷ்ணா மைன்ஸ் மற்றும் சவுத் இந்தியா மைன்ஸ் அன்ட் மினரல்ஸ் லிட் ஆகிய நிறுவனங்களும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அனுமதி இன்றி சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 விதியை மீறி செயல்படுவதால் நிறுவனங்களையும் மூடுமாறு கேட்டு தனது உரையை முடித்தார். இக்கருத்துக்களை வலியுறுத்தி இணைப்பு 1ல் காணும் கடித்தினை சமர்ப்பித்தார்

மேலும் அவர் இணைப்பு எண் 2ல் இணைக்கப்பட்டுள்ள கடிதத்தில் கீழ்க்கண்ட கருத்துகளை சமர்ப்பித்தார்.

1. நீர் மாசு பட காரணமாகிறது.
2. காற்று மாசு ஏற்படுகிறது.
3. ஒலி மாசு ஏற்படுகிறது
4. வெடிவைக்கும் போது கட்டடங்கள் அதிர்கின்றன.
5. சமுதாய நலப் பணிகள் எதுவும் செய்யப்படவில்லை.
6. வேலைவாய்ப்பு உட்பட பொருளாதார நலத்திட்டங்கள் எதுவும் இல்லை.
7. புஞ்சை நிலங்கள் பாதிக்கப்படுகின்றன.
8. சுரங்கம் செய்வதனால் ஓசோன் ஆக்ஸிஜன் பகுதி மாற்றம் ஏற்படுகினறது.
9. கால்நடை மேய்ச்சல் பாதிக்கப்படுகின்றது.
10. மேல் மண் சீனப்பெருஞ்சுவர்போல் குவித்து வைக்கப்பட்டுள்ளது.
11. அனுமதிக்கப்பட்ட 400 டன் சுண்ணாம்புக்கல்லுக்கு பதிலாக 1000 டன் சுண்ணாம்புக்கல் சுரங்கம் செய்யப்படுகிறது.
12. நிலத்தடி நீர் மட்டம் குறையவாய்ப்புள்ளது.
13. சுரங்கத்தில் வெளிப்படும் தண்ணீர் விவசாயத்திற்காக கொடுக்கப்படவில்லை.
14. நிலநடுக்கம் ஏற்படலாம்.

15. IBM விதிகளின்படி ஐந்தாண்டு திட்டம் சுற்றுச்சூல் தாக்க மதீப்பீட்டு அறிக்கையில் சேர்க்கப்படவில்லை.
16. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அனுமதி இல்லாமல் சுரங்கம் இயக்கப்படுவதால் சுரங்கம் மூடப்படவேண்டும்.
17. ஒரு தனிநபரின் லாபத்திற்காக பொது மக்கள் பாதிக்கப்படக் கூடாது எனவே சுரங்கம் மூடப்படவேண்டும்.

**திரு எம். சுடலைக்கண்ணன், முன்னாள் திருநெல்வேலி மாநகராட்சி உறுப்பினர் மற்றும் மாவட்ட எஸ்ஸி/எஸ்டி காங்கிரஸ் கமிட்டியினர்**

1. சுமார் 20க்கும் மேலான கிராமங்கள் சுரங்கத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளது. இந்த கிராமங்கள் அடிப்படையில் விவசாயத்தைச் சார்ந்து அமைந்துள்ளது. இவற்றின் அடிப்படை தேவை நிலத்தடி நீர் அவை பாதிக்கப்படுகிறது.
2. சுரங்கத்தின் செயல்பாடுகள் அதிக ஆழம் வரை செல்வதால், நிலத்தடி நீர் மட்டம் கீழே செல்வதால் மின்விசை மோட்டார் பொருத்தி நிலத்திலிருந்து 40 அடி ஆழத்திற்கு மேல் தண்ணீர் எடுக்க இயலவில்லை. இதனால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்படுகிறது.
3. இந்த இடங்கள் பாலைவனமாக மாறிவருகிறது.
4. அருகில் உள்ள பள்ளிக்கோட்டை கிராம மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்.
5. சுற்றுச் சூழல் அனுமதி இல்லாமல் சுரங்கச் செயல்பாடு செயல்படுவது குற்றமாகும்.
6. அரசாங்கம் பொது மக்களுக்கு இலவசமாக ஆடு, மாடுகள் வழங்குவதாக அறிவித்துள்ளது. ஆனால் இந்த சுரங்கச் செயல்பாடுகளால் ஆடு, மாடுகளை மேய்ச்சலுக்கு அனுப்புவது பாதிக்கப்படுகிறது.
7. நாஞ்சான்குளம், தென்கலம், புதூர், நாராணம்மாள்புரம், பள்ளிக்கேட்டை, ஆளவந்தான்குளம், பகுதி கிராம வாசிகள் நிலத்தடி நீரை இழந்து இடம் பெயர்ந்து செல்லும் நிலை உருவாகியுள்ளது. என்று கூறி சுரங்க செல்பாடுகள் நிறுத்தபடவேண்டும் என்று கூறி எழுத்து மூலம் இதுபற்றி மனு



ஒன்றையும் அளித்தார். அது இணைப்பு என் 3னாக இணைக்கப்பட்டுள்ளது.

**திரு டி. இராஜமாணிக்கம் (AICCTU)** கீழ்க்கண்ட விபரங்களை இணைப்பு 4ன்படி மனுவாகக் கொடுத்தார்.

1. அதிகாரிகள் குத்தகை உரிமத்தை நீட்டிக்கும் போது சட்டங்கள் மற்றும் விதிகளை கடைபிடிக்கவில்லை. சுரங்கமானது சட்டத்திற்குப் புறம்பாகவும், விதிமுறைகளை மீறியும் நடைபெறுகிறது. அதிகாரிகளுக்கு இது நன்கு தெரிந்தும் சுரங்கம் செயல்படுவதில் அவர்களுக்கு உதவிகரமாக இருக்கின்றனர். இதனால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்
2. குடியிருப்புகள், சுரங்கப்பகுதியின் மிக அருகாமையில் உள்ளது. பொதுவாக குடியிருப்பு பகுதி சுரங்கப்பகுதியில் இருந்து 300 மீட்டர் தொலைவில் இருக்கவேண்டும். ஆனால் அதற்குமாறாக, குடியிருப்பு வீடுகள் சுரங்கபகுதியில் இருந்து கிட்டத்தட்ட 50 மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இது சட்டத்திற்கு புறம்பாகவும், குடியிருப்பு வீடுகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலும் உள்ளது அதிகாரிகள் சுரங்கத்தை பார்வையிடாமல் இயந்திரத்தனமாக சுரங்க குத்தகையை அனுமதித்ததும் நீட்டித்தும் கொடுக்கின்றனர்.
3. அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமாகவும் சட்ட வரைமுறைகளை பின்பற்றாமலும் சுரங்கச் செயல் நடைபெற்று வருகிறது. இந்த செயல் தங்களது அலுவலகம் தொடர்புடைய அதிகாரிகளின் துணையோடு நடைபெறுகிறது. சுரங்கச் செயல்பாட்டில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நிர்ணயித்த அளவுகள் சரியாக பின்பற்றப்படவில்லை. குத்தகைதாரர்கள் ஜெ.சி.பி. போன்ற எந்திரங்கள் மற்றும் கனரக வாகனங்கள் உதவியோடு நாளொன்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக சுரங்கச்செயல்பாடுகளை சில அரசாங்க அதிகாரிகளின் துணையோடு செயல்படுத்தி வருகிறார்கள்.
4. பசுமை வளர்ப்பு மற்றும் சூழலியல் சமன்பாடு காத்தல் தொடர்பான விபரங்களை மீறி சுரங்கம் செய்யப்படுவதால் நிலத்தடி நீர் குறைந்து விட்டதால் உள்ளூர் மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.



5. தற்பொழுது செராமிக் அடுக்குகளை அப்புறப்படுத்த பயன்படுத்தும் டெட்டனேட்டர்ஸ் சக்திவாய்ந்ததாகவும், பயன்படுத்தும் அளவு நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிகமாகவும் உள்ளது.

6. வருவாய்த்துறை அதிகாரிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு அதிகாரிகளும் இந்நிறுவனத்திற்கு சட்டத்திற்குப் புறம்பாக பெருமளவில் உதவி வருகின்றனர். சுரங்க அனுமதி மற்றும் கட்டட வரைபட அனுமதி ஆகியவை வழங்குவதில் கூட உள்ளாட்சி அதிகாரிகள் இந்நிறுவனத்திற்கு சாதகமாக செயல்பட்டு மக்களை பாதுகாக்கத் தவறி வருகின்றனர். புதிய திட்டங்களுக்கு அனுமதி அளித்து சட்டத்திற்கு புறம்பாக சுரங்கம் செய்வதை கட்டுப்படுத்தவும் தவறி வருகின்றனர். தற்போது பயன்படுத்தப்படும் வெடி பொருட்கள் பொது மக்கள் மற்றும் உள்ளூர்வாசிகளை பெரிதும் பாதிக்கின்றது. சுரங்கம் செய்பவர்கள் இரவும் பகலும் வெடி பொருட்களை பயன்படுத்துவதால் ஏற்படும் பெரிய சத்தம், குடியிருப்புகளை குலுங்க செய்கிறது.
7. நிலத்தடி நீர் மட்டம் குறைதல் மற்றும் மாசு ஏற்படுவதால் குடிநீர் பாதிக்கப்பட்டு உள்ளூர் மக்கள் அவதிப்படுகின்றனர்
8. உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு முற்றிலுமாக மறுக்கப்படுகிறது. சுரங்கத்தில் பெரும்பாலும் குழந்தை தொழிலாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். அதிகாரிகள் குறைந்த பட்சம் மாதத்திற்கு ஒருமுறை கூட சுரங்க வளாகத்தை ஆய்வு செய்ய தவறி வருகின்றனர். வேலையாட்கள் பெரும்பாலும் ராஜஸ்தான், ஆந்திரபிரதேசம் மற்றும் பீகாரிலிருந்து நியமிக்கப்படுகின்றனர். தொழிலாளர் சட்டங்கள் மீறப்பட்டும் தவறாக பயன்படுத்தப்பட்டும் வருகின்றன.
9. தூசி, அலர்ஜி மற்றும் பனி போன்ற தூசி உருவாக்கம் போது மக்களின் நுரையீரல் மற்றும் சுவாசக் குழாயை பெரிதும் பாதிக்கின்றது.
10. இந்த நிறுவனத்தின் மூலம் அரசுக்கு வரவேண்டிய ராயல்டி தொகையினை சரியாக மதிப்பிட அதிகாரிகள் தவறி விடுகின்றனர். கடந்த காலங்களில் அதிகாரிகள் பெருந்தொகையை லஞ்சமாக பெற்றுகொண்டு குறைந்த அளவு ராயல்டி தொகையை நிர்ணயித்து

-6-

அதிக அளவு சுரங்கம் செய்ய அனுமதித்து உள்ளனர். தற்போது, கணக்கிட்டால் கடந்த காலங்களில் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு பல கோடிகளைத் தாண்டும். தற்பொழுதும் அதிகாரிகள் ராயல்டி தொகையை குறைவாக நிர்ணயிப்பதால் அரசுக்கு வரவேண்டிய பணப்பயன் பாதிக்கப்படுகிறது.
11. மழைநீர் ஏற்கனவே சுரங்கம் செய்யப்பட்ட பகுதியில் தேங்குவதால் யாருக்கும் பயன் இன்றியும் விவசாயத்திற்கு பயன்படுத்த முடியாமலும் உள்ளது.
12. சுரங்க நிறுவனத்தால் தொழிலாளர் பட்டியல் பராமரிக்கப்படவில்லை. தொழிலாளர்களுக்கு நலத்திட்டங்கள் ஏதும் செயல்படுத்தப்படவில்லை அவர்களுக்கு ஆயுள் காப்பீடு, வருங்கால வைப்புநிதி பயன்கள், போனஸ் மற்றும் குறைந்த அளவு ஊதியம் கூட மறுக்கப்படுகிறது. எனவே சுரங்க நிறுவனத்தினர் பீகார், ராஜஸ்தான் போன்ற வெளி மாநிலங்களில் இருந்து தொழிலாளர்களை நியமித்துள்ளனர். காவல் துறையுடன் திடீர் ஆய்வு மேற்கொண்டால் இவ்வுண்மையை தெரிந்து கொள்ளலாம்.
13. சுரங்கத்தின் அன்றாட செயல்பாடுகளை கண்காணிக்கவும் செயல்பாடுகள் மற்றும் விதிமீறல்களை கண்காணிக்க பொது மக்கள் பிரதிநிதி உட்பட பலதுறை அலுவலர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைப்பது அவசியமாகும். இக்கண்காணிப்பு குழு சுரங்க செயல்பாடுகளை கண்காணித்து குறைந்தபட்சம் மாதத்திற்கு ஒருமுறை அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கலாம்.

மேலும் அவர் தனது கருத்துரையில் சுரங்கம் மூடப்படவேண்டும் என்றும் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்றும் கூறினார். சுரங்க குத்தகை உரிமத்தை ரத்து செய்து இந்நிறுவனம் ஈட்டிய இலாபத்தினை திரும்பப்பெற்று தொழிலாளர் நலத்திட்டங்களுக்கு பயன்படுத்தப்படவேண்டும் என்றும் கூறினார்.

மாவட்ட ஆட்சியர் சுரங்கத்தில் வெளிமாநில தொழிலாளர்கள் மற்றும் குழந்தைத் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனரா என்று சுரங்க நிறுவனத்தினரிடம் கேட்டார். அதற்கு அவர்கள் குழந்தை தொழிலாளர்கள், வெளி மாநில தொழிலாளர்களும் இல்லை என்று பதில் அளித்தனர்.

-7-

மாவட்ட ஆட்சியர் சுரங்கத்தை பொது மக்கள் பார்வையிடலாம் என தெரிவித்தார்.

மேலும் அருகிலுள்ள கிராம மக்கள் சுரங்கத்தினை பார்வையிட்டு குழந்தை தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

அதேபோல தொழிலாளர் நியமனம் தொடர்பாக ஏற்படும் தகராறுகள் குறித்து தொழிலாளர் துறையிடம் தெரிவிக்கலாம் எனவும் கூறினார். தொழிற்சாலை ஆய்வாளர் மற்றும் உதவி இயக்குநர் (கனிமம் மற்றும் சுரங்கம்) ஆகியோர் சுரங்கத்தை கூட்டாய்வு செய்து அறிக்கையினை மாவட்ட ஆட்சித்தலைவருக்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவின்றி சுரங்கத்தை இயக்கக்கூடாது என்று கண்டிப்பாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு உத்தரவிட்டார். மேலும் இது தொடர்பாக மாவட்ட சுற்றுப்புற சூழல் பொறியாளர், மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர் மற்றும்

உறுப்பினர் செயலர் அவர்களுக்கு வாரியத்தின் இசைவின்றி இயக்கப்படும் இச்சுரங்கத்தின் மீது நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்குமாறு பணித்தார்.

திரு களங்கராயன், தனது உரையில் கடினமான வெடி பொருட்கள் வைத்து சுரங்கம் செய்யக்கூடாது எனவும், ஜாக்ஹாமர் மூலம் மட்டும் துளையிடுதல் செய்யலாம் எனவும் கூறினார். கிராம மக்கள் பலரும் கூட்டத்தின் இறுதியில் இதே கருத்தை வலியுறுத்தினர். அவர்கள் சுரங்கத்தில் வெடிபொருட்கள் எதுவும் அனுமதிக்க கூடாது எனவும் சுண்ணாம்புக் கல்லை அகற்றுவதற்கு ஜாக்ஹாமர் துளையிடுதல் கருவி மட்டுமே பயன்படுத்தலாம் என அறிவுறுத்துமாறு கேட்டுக்கொண்டனர்.

இறுதியாக கூட்ட நடவடிக்கைகளை தொகுத்து வழங்கிய மாவட்ட ஆட்சியர், மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணைப்பெறாமல் சுரங்கம் இயக்கப்படலாகாது எனவும், மாசு கட்டுப்பாடு வாரிய இசைவினைப் பெறாமல் இயக்கபடுவதற்காக சுரங்கத்தின் மீது நடவடிக்கை எடுக்குமாறு சுற்றுச் சூழல் பொறியாளரைக் கேட்டுக் கொண்டு கூட்டத்தை நிறைவு செய்தார்.

**மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருநெல்வேலி**

**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**திருநெல்வேலி**